முழுப் பதிப்புரிமையுடையது

# இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA2 பரீட்சை – 2017 யூலை

## (AA21) உயர் நிதிக் கணக்கீடு

(Advanced Financial Accounting)

2017-07-15
முற்பகல்
[8.45 – 12.00]

**பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசித்து விளங்கிக்கொள்ள : 15 நிமிடங்கள்*

*விடையெழுத : 03 மணித்தியாலம்*

பக்கங்கள் : 11
வினாக்கள் : 10

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) ***விடைகள்*** *யாவும் உமக்கு வழங்கப்படும்* ***விடைப் புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியில்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்புகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் மேற்கொண்டிருப்பின் அவற்றை தெளிவாகக் கூறுக.*

(5) *திட்டமிடப்பட முடியாத கணிப்பான்களைப் பாவித்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***செயல் வினைச் சொல் நிரல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் உள்ளடக்கப் பட்டுள்ள செயல் வினைச் சொல்லின் பொருள் வரையறையின் அடிப்படையில் அந்தந்த வினாக்களுக்கு விடையளிக்கப்படல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

இந்தப் பகுதியிலுள்ள எட்டு (08) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

*வினா இலக்கங்கள்* ***1.1*** *முதல்* ***1.4*** *வரையான வினாக்களுக்கு மிகவும் சரியான விடையைத் தெரிவுசெய்து, உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதி, அவற்றுக்கு எதிரே நீர் தெரிவுசெய்த விடையின் இலக்கத்தினை எழுதுக.*

**1.1** பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் கீழ்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன :

**(a)** பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படும் பங்குதாரர்களால் முகாமை செய்யப்படுகின்றன.

**(b)** எல்லாப் பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகளும் மூலதனத்தை அதிகரிப்பதற்கு பொதுமக்களுக்கு பங்குகளை வழங்க முடியாது.

**(c)** கடன் மூலதனத்தைப் பெறுவதற்கு பரிப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனிகள் பொதுமக்களுக்கு தனிச்சங்களை வழங்கமுடியும்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் பரிப்பு வரையறுக்கப்பட்ட கம்பனிகள் தொடர்பில் சரியானவை:

(1) **(a)** மற்றும் **(c)** மாத்திரம் (2) **(a)** மற்றும் **(b)** மாத்திரம்

(3) **(b)** மாத்திரம் (4) **(b)** மற்றும் **(c)** மாத்திரம் (02 புள்ளிகள்)

**1.2** 1890 ஆம் ஆண்டின் பங்குடமை ஒழுங்குச்சட்டத்தின் ஏற்பாடுகள் தொடர்பில் கீழே தரப்பட்டுள்ள கூற்றுக்களை கவனத்திற் கொள்க :

**(a)** சகல பங்காளர்களும் மூலதனத்தை சமமாக உள்ளிட வேண்டும்.

**(b)** இருப்பிலுள்ள எல்லாப் பங்காளர்களினதும் சம்மதம் இல்லாமல் புதிய பங்காளர் ஒருவரைச் சேர்த்துக்கொள்ள முடியாது.

**(c)** பங்குடமை வியாபாரத்தில் செயற்படும் பங்காளர்கள் ஊதியம் பெற உரித்துடையவர் ஆவர்.

மேலே தரப்பட்டுள்ள கூற்றுக்களுள் பங்குடமை தொடர்பான சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** மற்றும் **(b)** மாத்திரம். (2) **(a)** மாத்திரம்.

(3) **(b)** மற்றும் **(c)** மாத்திரம். (4) தரப்பட்டுள்ளவை எல்லாம். (02 புள்ளிகள்)

**1.3** இலாப நோக்கமற்ற அமைப்புகள் (NPOs) தொடர்பாக கீழ்வரும் கூற்றுக்கள் தரப்பட்டுள்ளன :

**(a)** இலாப நோக்கமற்ற அமைப்பின் தொழிற்பாடுகளிலிருந்தான நிகர நிதிப் பெறுபேறு ‘‘மிகை’’ அல்லது ‘‘பற்றாக்குறை’’ எனப்படும்.

**(b)** இலாப நோக்கற்ற அமைப்பின் பிரதான நோக்கம் அதன் பெறுபேற்று மிகையை அதிகரிப்பதாகும்.

**(c)** இலாப நோக்கற்ற அமைப்புகள் அங்கத்தவர் சந்தா தவிர்ந்த பிற வருமான மூலங்களைக் கொண்டிருக்கலாம்.

மேலுள்ளவற்றுள் இலாப நோக்கற்ற அமைப்புத் தொடர்பில் சரியான கூற்றுக்கள் :

(1) **(a)** மற்றும் **(b)** மாத்திரம். (2) **(a)** மற்றும் **(c)** மாத்திரம்.

(3) **(a)** மாத்திரம். (4) தரப்பட்டுள்ளவை எல்லாம். (02 புள்ளிகள்)

**1.4** **வரையறுக்கப்பட்ட சண் (தனி) கம்பனியின்** 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சில தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன :

| | |
|---|---|
| 2016 ஏப்ரல் 01 இல் தொக்குகள் | ரூ. 450,000 |
| 2017 மார்ச் 31 இல் தொக்குகள் | ரூ. 600,000 |
| ஆண்டிற்கான கொள்வனவு | ரூ. 900,000 |
| ஆண்டிற்கான மொத்த இலாபம் | விற்பனையில் 40% |

**2017** மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான விற்பனைப் பெறுமதி :

(1) ரூ. 1,050,000/- (2) ரூ. 1,250,000/- (3) ரூ. 750,000/- (4) ரூ. 1,470,000/- (02 புள்ளிகள்)

***1.5*** *தொடக்கம்* ***1.8*** *வரையான வினாக்களுக்கான விடைகளை உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கங்களை ஒழுங்குவரிசையில் எழுதி அவற்றிற்கு எதிரே எழுதுக.*

**1.5** சொத்தொன்றினை நடைமுறைச் சொத்தாக வகைப்படுத்துவதற்கு நிறைவுசெய்யப்பட வேண்டிய தேர்வு நிபந்தனைகள் இரண்டு (02) எழுதுக. (02 புள்ளிகள்)

**1.6** **அனுராதா** ஒரு தனிவியாபார உரிமையாளர். 2016 சனவரி 01 ஆந் திகதி அவரின் வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 2,569,400/- ஆகவும் மொத்தப் பரிப்புக்கள் ரூ. 1,412,800/- ஆகவும் இருந்தன. 2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டின்போது அவர் மேலதிக மூலதனமாக ரூ.650,000/- இனை உள்ளிட்டதுடன் ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும் மாதமொன்றிற்கு ரூ.180,000/- வீதம் எடுத்திருந்தார்.

2016 டிசெம்பர் 31 இல் **அனுராதா**வின் வியாபாரத்தின் மொத்தச் சொத்துக்கள் ரூ. 2,614,100/- ஆகவும் மொத்தப் பரிப்பு ரூ. 1,369,700/- ஆகவும் இருந்தது.

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான **அனுராதா**வினது வியாபாரத்தின் இலாபத்தினைக் கணிக்குக (03 புள்ளிகள்)

**1.7** **A, B** மற்றும் **C** ஆகியோர் முறையே 3 : 5 : 2 எனும் விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிரும் வகையில் பங்குடமை வியாபாரமொன்றில் ஈடுபட்டுள்ளார். **A** பங்குடமையிலிருந்து விலகத் தீர்மானித்ததுடன் **A** இற்கு செலுத்தவேண்டியவற்றைச் செலுத்திய பின்னர் **B** யும் **C** யும் பங்குடமையைத் தொடர்வதற்குத் தீர்மானித்திருந்தனர்.

**B** மற்றும் **C** க்கு இடையிலான புதிய இலாபப் பகிர்வு விகிதத்தினைக் கணிக்குக. (03 புள்ளிகள்)

**1.8** **வரையறுக்கப்பட்ட சுசன் (தனி) கம்பனியானது** பெறுமதிசேர் வரிக்கு (VAT) பதிவுசெய்யப்பட்ட கம்பனியாகும். 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த காலாண்டிற்கு கீழ்வரும் தகவல்கள் பெறப்பட்டுள்ளன :

<u>VAT பரிப்புடைய விற்பனைகள்</u> :

- காசு விற்பனைகள் - ரூ. 100,000/- (VAT நீங்கலாக).
- கடன் விற்பனைகள் - ரூ. 345,000/- (VAT உள்ளடங்கலாக).

<u>கொள்வனவுகள்</u> :

- காசுக் கொள்வனவுகள் - ரூ. 92,000/- (VAT உள்ளடங்கலாக).
- கடன் கொள்வனவுகள் - ரூ. 230,000/- (VAT உள்ளடங்கலாக).

2017 சனவரி 01 ஆந் திகதி VAT கட்டுப்பாட்டுக் கணக்கில் மீதி எதுவும் இருக்கவில்லை.
*(பிரயோகிக்கக்கூடிய VATவீதம் 15%).*

2017 மார்ச் 31 ஆந் திகதியில் VAT கட்டுப்பாட்டுக் கணக்கினைத் தயாரிக்குக. (04 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## <u>பகுதி B</u>

இந்தப் பகுதியிலுள்ள ஐந்து (05) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 25 புள்ளிகள்)

### வினா 02

**பெரேரா, சில்வா** மற்றும் **ஐவன்** ஆகியோர் முறையே 5:3:2 எனும் விகிதத்தில் இலாப, நட்டங்களைப் பகிரும் வகையில் பங்குடமை வியாபாரமொன்றினை நடாத்தி வருகின்றனர். 2017 மார்ச் 31 ஆந் திகதி **ஐவன்** பங்குடமையிலிருந்து விலகுவதற்குத் தீர்மானித்ததுடன் **பெரோரா**வும் **சில்வா**வும் இலாப, நட்டங்களை முறையே 3:2 எனும் விகிதத்தில் பகிரும் வகையில் பங்குடமையைத் தொடர்வதற்குத் தீர்மானித்தனர். **ஐவன்** பங்குடமையிலிருந்து விலகும் தேவைக்காக பங்குடமையின் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்டதுடன் அந்த விபரங்கள் கீழ்வருமாறு :

| | **கிரயம் (ரூ.'000)** | **2017.03.31 இல் திரள் தேய்மானம் (ரூ.'000)** | **2017.03.31 இல் மீள்மதிப்பீட்டுத் தொகை (ரூ.'000)** |
|---|---|---|---|
| காணி | 1,000 | - | 1,500 |
| கட்டடம் | 2,000 | 600 | 1,800 |
| எந்திரங்கள் | 800 | 500 | 600 |
| அலுவலக உபகரணம் | 700 | 200 | 500 |

நடைமுறையல்லாச் சொத்துக்கள் கணக்கேடுகளில் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியில் முன்கொண்டு வரப்படும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

மீள்மதிப்பீட்டினை பதிவுசெய்வதற்குத் தேவையான நாட்குறிப்புப் பதிவுகளை (journal Entries) **தயாரிக்குக.**
(05 புள்ளிகள்)

## வினா 03

**வரையறுக்கப்பட்ட சிவா (தனி) கம்பனியின்** 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வங்கிக் கணக்கிணக்கக் கூற்று கீழ்வருமாறு :

| | ரூ. | ரூ. |
|---|---|---|
| காசேட்டின் மீதி – 2017 பெப்ரவரி 28 இல் | | (12,300) |
| கூட்டு: வழங்கப்பட்டு கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் : | | |
| காசோலை இல. 251371 | 12,000 | |
| காசோலை இல. 251372 | 13,200 | 25,200 |
| கழி: வைப்பிலிடப்பட்டு தேறாத காசோலைகள் | | |
| காசோலை இல. 265971 | | (50,000) |
| வங்கிக் கூற்றின்படி மீதி (மேலதிகப் பற்று) – 2017 பெப்ரவரி 28 இல் | | **(37,100)** |

2017 மார்ச் மாதம் தொடர்பில் கீழ்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2017 மார்ச் மாத வங்கிக் கூற்றில் வங்கியானது காசோலைப் புத்தக அறவீடாக ரூ. 3,000/- இனைக் கழித்திருந்தது. இது காசேட்டில் பதிவுசெய்யப்படவில்லை.

(2) 2017 மார்ச் மாதத்தில் வழங்கப்பட்ட கீழ்வரும் காசோலைகள் 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையில் கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| காசோலை இல. | திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 251433 | 27.03.2017 | 4,500 |
| 251439 | 31.03.2017 | 12,890 |

(3) 2017 மார்ச் மாதத்தில் வைப்புச் செய்யப்பட்ட கீழ்வரும் காசோலை 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை தேறியிருக்கவில்லை :

| காசோலை இல. | திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 452316 | 30.03.2017 | 12,200 |

(4) 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் காட்டப்பட்ட தேறாத வைப்பு ரூ.50,000/- ஆனது 2017 மார்ச் மாதத்தில் தேறியிருந்தது.

(5) 2017 பெப்ரவரி மாதத்தில் வழங்கப்பட்ட கீழ்வரும் காசோலை 2017 மார்ச் 31 ஆந் திகதி வரை கொடுப்பனவுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை :

| காசோலை இல. | திகதி | தொகை (ரூ.) |
|---|---|---|
| 251372 | 17.02.2017 | 13,200 |

(6) 2017 மார்ச் 31 இல் **வரையறுக்கப்பட்ட சிவா (தனி) கம்பனியின்** காசேடு வங்கி மீதியாக ரூ.107,000/- சாதக மீதியினைக் காட்டியது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2017 மார்ச் 31 இல் செம்மையாக்கிய காசேடு (01 புள்ளி)

(b) 2017 மார்ச் 31 இல் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று (04 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட சில்வர் (தனி) கம்பனியின்** 2017 மார்ச் மாதத்திற்கான தொகுக்கப்பட்ட சம்பளப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது :

| அடிப்படைச் சம்பளம் (ரூ.) | மேலதிகநேர வேலைக் கொடுப்பனவு (ரூ.) | EPF கழிவுகள் @ 8% (ரூ.) | நிகரச் சம்பளம் (ரூ.) |
|---|---|---|---|
| 725,000 | 91,000 | (58,000) | 758,000 |

கம்பனியானது அடிப்படைச் சம்பளத்தில் 12% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் (EPF) 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் (ETF) பங்களிப்புச் செய்கின்றது.

**நீங்கள் செய்யவேண்டியது :**

**வரையறுக்கப்பட்ட சில்வர் (தனி) கம்பனியின்** மேற்படி சம்பளம், EPF மற்றும் ETF ஆகியவற்றைப் பதிவுசெய்ய (காசு ஊடுசெயல்களுக்கான பதிவுகள் அடங்கலாக) தேவையான நாட்குறிப்புப் பதிவுகளைத் **தயாரிக்குக.** (05 புள்ளிகள்)

## வினா 05

**வரையறுக்கப்பட்ட ஈகல் (தனி) கம்பனியானது** 2014 ஏப்ரல் 01 ஆந் திகதி எந்திரமொன்றினைக் கொள்வனவு செய்தது தொடர்பில் கீழ்வரும் செலவுகளைச் செய்தது :

| | ரூ. |
|---|---|
| எந்திரத்தின் கொள்வனவு விலை | 1,325,000 |
| சுங்கத்தீர்வும் வெளியேற்றுதல் செலவுகளும் | 35,600 |
| நிறுவுதற் கிரயம் (Installation cost) | 43,900 |

கொள்வனவுத் திகதியில் எந்திரத்தின் பயன்தரும் ஆயுட்காலம் 10 ஆண்டுகளாகவும், ஈற்றுப் பெறுமதி (residual value) ரூ. 200,000/- ஆகவும் மதிப்பிடப்பட்டது.

2014 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்த இந்த எந்திரத்திற்காக 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி கம்பனி மேம்படுத்தற் பொதி (upgrade package) ஒன்றினை ரூ. 260,400/- கிரயத்தில் கொள்வனவு செய்தது. இந்த மேம்படுத்தல் காரணமாக இயந்திரத்தைப் பயன்படுத்தி உற்பத்தி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களின் அலகொன்றின் உற்பத்தி நேரம் குறைவடைந்தது. அத்துடன் எந்திரத்தின் மதிப்பிடப்பட்ட எஞ்சிய பயன்தரும் ஆயுட்காலம் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி 12 ஆண்டுகளாக மதிப்பிடப்பட்டது. ஈற்றுப் பெறுமதியில் மாற்றமில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

(a) எந்திரத்தின் மேம்படுத்தல் தொடர்பான செம்மையாக்கங்களை பதிவுசெய்த பின்னர் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியில் இந்த எந்திரத்தின் கிரயத்தினைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவுற்ற ஆண்டில் இந்த எந்திரம் தொடர்பில் அறவிடப்படவேண்டிய தேய்மானத்தினைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 06

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் தனியுரிமையாளர் வியாபாரமான **ஷார்ப் புத்தக நிலையக்** கணக்கேடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டதாகும் :

(1)

| | **2017 மார்ச் 01 இல் மீதி (ரூ.'000)** |
|---|---|
| கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (வரவு மீதி) | 2,560 |
| கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (செலவு மீதி) | 3,200 |

(2) 2017 மார்ச் மாதத்தில் கீழ்வரும் ஊடுசெயல்கள் இடம்பெற்றன :

| | **ரூ.'000** |
|---|---|
| கடனுக்குக் கொள்வனவு | 5,200 |
| கடனுக்கு விற்பனை | 6,200 |
| கடன் கொள்வனவுத் திரும்பல் | 750 |
| கடன்கொடுத்தோரிடமிருந்து பெற்ற கழிவுகள் | 350 |
| கடன்கொடுத்தோருக்கான கொடுப்பனவுகள் | 4,500 |
| கடன்பட்டோரிடமிருந்து பெற்ற தொகை | 3,200 |

***நீங்கள் செய்யவேண்டியவை :***

2017 மார்ச் மாதத்திற்கு கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கு. (02 புள்ளிகள்)

(b) கடன்கொடுத்தோர் கட்டுப்பாட்டுக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

## வினா 07

கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் தனியுரிமையாளர் வியாபாரமான **அமாலி டிரேடர்ஸின்** ஏடுகளிலிருந்து பிரித்தறியப்பட்டன :

(1) வியாபாரத்தின் சொத்துக்களும் பரிப்புக்களும் :

*(ரூ.'000)*

| | **2016 ஏப்ரல்01 இல்** | **2017 மார்ச் 31இல்** |
|---|---|---|
| காணியும் கட்டடமும் (முன்கொணரற் தொகையில்) | 5,000 | 4,800 |
| மோட்டார் வாகனங்கள் (முன்கொணரற் தொகையில்) | 7,000 | 7,400 |
| தொக்குகள் | 2,500 | 2,400 |
| வியாபார வருமதிகள் | 2,800 | 2,700 |
| வங்கி மீதி | 1,300 | ? |
| வியாபார சென்மதிகள் | 1,600 | 1,350 |
| அட்டுறு மின்கட்டணம் | 220 | 170 |

(2) **அமாலி** தமது வியாபாரமான **அமாலி டிரேடர்ஸ்** வியாபாரத்திற்கு முறையான கணக்கேடுகளைப் பேணவில்லை. 2016 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 2017 மார்ச் 31 ஆந் திகதி வரையிலான ஒரு வருடத்திற்கான வியாபார வங்கிக் கூற்றுக்களின் தொகுப்பு கீழ்வருமாறு :

| | **ரூ.'000** |
|---|---|
| **வைப்புகள் :** | |
| காசு விற்பனைகளிலிருந்து | 3,500 |
| வியாபார வருமதியாளர்களிடமிருந்து பெறுவனவு | 2,500 |
| கடன் பெறுவனவு | 1,000 |
| **காசோலைக் கொடுப்பனவுகள் :** | |
| காசுக் கொள்வனவு | 1,250 |
| வியாபாரச் சென்மதியாளர்களுக்குக் கொடுப்பனவு | 1,500 |
| மோட்டார் வாகனக் கொள்வனவு – 2017 மார்ச் 31 இல் | 1,000 |
| மின்கட்டணம் | 280 |
| கூலி | 1,400 |
| பல்லினச் செலவுகள் | 330 |

(3) **அமாலி** காசு விற்பனைகளிலிருந்து மாதாந்தம் ரூ. 25,000/- வீதம் எடுத்துக்கொண்டதனைத் தவிர சகல காசுப் பெறுவனவுகளையும் வங்கியில் வைப்புச் செய்துள்ளார்.

(4) **அமாலி** 2016 யூலை 01 ஆந் திகதி ரூ. 1,000,000/- வங்கிக் கடனை 15% ஆண்டு வட்டிக்குப் பெற்றிருந்தார். இந்தக் கடனுக்கான வட்டி மாதாந்தம் செலுத்தப்பட வேண்டும். எனினும் 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டில் வட்டி எதுவும் செலுத்தப்படவில்லை. கடன் மீள்கொடுப்பனவு 2017 ஏப்ரல் 1 ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகும்.

**நீங்கள் செய்யவேண்டியது :**

2017 மார்ச் 31 இல் **அமாலி டிரேடர்ஸின்** பரீட்சை மீதியைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

## வினா 08

**ஷா ஷா** பங்குடமையின் பங்காளர்களான **கயேஷாவும் நிமேஷாவும்** இலாப, நட்டங்களை முறையே 3 : 2 எனும் விகிதத்தில் பகிர்ந்துவந்தனர். 2016 சனவரி 01 ஆந் திகதி **அதேஷா** புதிய பங்காளராக பங்குடமையில் சேர்க்கப்பட்டார். புதிய பங்குடமை உடன்படிக்கை கீழ்வருவனவற்றிற்கு ஏற்பாடு செய்கிறது:

(1) பங்காளர்கள் கீழ்வரும் வருடாந்த சம்பளம் பெற உரித்துடையவர்கள் :

**கயேஷா** : ரூ. 360,000/-

**நிமேஷா** : ரூ. 120,000/-

**அதேஷா** : ரூ. 800,000/-

(2) பங்காளர்கள் ஆண்டிற்கு 5% மூலதன வட்டி பெற உரித்துடையவர்கள்.

(3) பங்காளர்களிடையே இலாப, நட்டம் சமமாகப் பகிரப்படும்.

(4) 2016 சனவரி 01 ஆந் திகதி பங்குடமையின் நன்மதிப்பு ரூ. 2,400,000/- ஆக மதிப்பிடப்பட்டுள்ளது. கணக்கேடுகளில் நன்மதிப்புக் கணக்கு திறக்கப்படாது பங்காளர் மூலதனக் கணக்கினூடாக செம்மை யாக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(5) 2016 டிசெம்பர் 31 இல் பங்குடமையின் பரீட்சை மீதியிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன:

*(ரூ.'000)*

| | வரவு | செலவு |
|---|---|---|
| 2016 சனவரி 01 இல் **அதேஷா** உட்படுத்திய மூலதனம் | | 3,600 |
| 2016 சனவரி 01 இல் மூலதனக் கணக்கு மீதிகள் : | | |
| **கயேஷா** | | 40,000 |
| **நிமேஷா** | | 20,000 |
| 2016 சனவரி 01 இல் நடைமுறைக் கணக்கு மீதிகள் : | | |
| **கயேஷா** | | 10,000 |
| **நிமேஷா** | 6,000 | |
| ஆண்டின்போது எடுப்பனவுகள் : | | |
| **கயேஷா** | 1,500 | |
| **நிமேஷா** | 1,000 | |
| **அதேஷா** | 600 | |

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான பகிர்வுக்கு முந்திய நிகர இலாபம் ரூ.20,000,000/- ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

2016 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக **ஷா ஷா** பங்குடமையின் கீழ்வரும் கணக்குகளைத் **தயாரிக்குக** :

(a) இலாப, நட்டப் பகிர்வுக் கணக்கு (04 புள்ளிகள்)

(b) பங்காளர்கள் நடைமுறைக் கணக்கு (03 புள்ளிகள்)

(c) பங்காளர்கள் மூலதனக் கணக்கு (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 09

**ரெயின்போ நீச்சல் கழகம்** அதன் நிர்மாணப் பணிகள் முடிவடைந்த பின்னர் அதன் தொழிற்பாட்டினை 2016 சனவரி 01 ஆந் திகதி ஆரம்பித்தது.

அதன் கணக்கேடுகளிலிருந்து கீழ்வரும் தகவல்கள் பிரித்தறியப்பட்டன :

(1) கொள்ளல், கொடுத்தல் கணக்கு: *(ரூ.'000)*

| | | | |
|---|---|---|---|
| கழகத்திற்கு அன்பளிப்புகள் | 10,000 | மின்சாரம் | 712 |
| தினசரி தடாக அனுமதிக் கட்டணம் | 5,500 | நீர்க் கட்டணம் | 535 |
| அங்கத்தவர் கட்டணம் | 780 | கூலி – துப்புரவு செய்வோர் | 648 |
| நீச்சல் விளையாட்டுப்போட்டி அன்பளிப்பு | 215 | நீச்சல் தடாக மொத்த நிர்மாணக் கிரயம் | 13,200 |
| நீச்சல் விளையாட்டுப்போட்டி அனுமதிக் கட்டணம் | 75 | நீச்சல் விளையாட்டுப்போட்டிச் செலவுகள் | 92 |
| நீச்சல் பயிற்சி வகுப்புக் கட்டணம் | 325 | வாடகை – அலுவலகம் | 240 |
| | | அச்சிடலும் காகிதாதிகளும் | 94 |
| | | பயிற்றுவிப்பாளர் கட்டணம் | 565 |
| | | பல்லினச் செலவுகள் | 265 |
| | | 31.12.2016 இல் மீதி கீ.கொ.செ. | 544 |
| | **16,895** | | **16,895** |

(2) அங்கத்தவர் ஒருவரின் வருடாந்த அங்கத்துவக் கட்டணம் (சந்தா) ரூ. 6,000/-.

(3) 2016 ஆம் ஆண்டின்போது 120 அங்கத்தவர்கள் கழகத்தில் இணைந்துகொண்டுள்ளதுடன் அவர்களின் அங்கத்துவக் கட்டணக் கொடுப்பனவு விபரங்கள் கீழ்வருமாறு :

| | ரூ. |
|---|---|
| 2016 ஆம் ஆண்டிற்கு மாத்திரம் அங்கத்துவக் கட்டணம் செலுத்தியோர் எண்ணிக்கை | 110 |
| 2016 மற்றும் 2017 ஆண்டுகளுக்கு அங்கத்துவக் கட்டணம் செலுத்தியோர் எண்ணிக்கை | 10 |

(4) கழக முகாமைத்துவம் நீச்சல் தடாகத்தினை நேர்கோட்டு அடிப்படையில் 10 ஆண்டுகளுக்கு தேய்மானம் செய்யத் தீர்மானித்துள்ளது.

(5) தினசரி அனுமதிக்கட்டணம் நீச்சல் கழகத்தின் அங்கத்தவர் அல்லாதோர் செலுத்தவேண்டியதாகும்.

(6) 2016 டிசெம்பர் 31 இல் கீழ்வரும் செலவுகள் அட்டுறுவாக இருந்தது :

| | **ரூ.** |
|---|---|
| 2016 டிசெம்பர் மாத மின்கட்டணம் | 60,000 |
| 2016 டிசெம்பர் மாத நீர்க் கட்டணம் | 30,000 |

**நீங்கள் செய்யவேண்டியது :**

**ரெயின்போ நீச்சல் கழகத்தின்** 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருமான, செலவினக் கூற்றினைத் **தயாரிக்குக.** (10 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

## <u>பகுதி D</u>

இப்பகுதியிலுள்ள ஒரேயொரு வினாவுக்கும் விடை தருக.

(25 புள்ளிகள்)

### வினா 10

2017 மார்ச் 31 ஆந் திகதியில் **வரையறுக்கப்பட்ட சிலிக்கன் (தனி) கம்பனியின்** பரீட்சை மீதி கீழே தரப்பட்டுள்ளது :

*(ரூ.'000)*

| | **வரவு** | **செலவு** |
|---|---|---|
| சாதாரண பங்கு மூலதனம் (300,000 பங்குகள்) | | 80,000 |
| 2016 ஏப்ரல் 01 இல் கைக்கொள் இலாபம் | | 32,000 |
| 8% தனிச்சங்கள் | | 70,000 |
| <u>ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் :</u> | | |
| காணியும் கட்டடமும் (காணி - ரூ. 38 மில்லியன்) | 88,000 | |
| மோட்டார் வாகனங்கள் | 220,000 | |
| <u>திரள் தேய்மானம் – 2016 ஏப்ரல் 01 இல் :</u> | | |
| கட்டடம் | | 15,000 |
| மோட்டார் வாகனங்கள் | | 83,000 |
| 2017 மார்ச் 31 இல் தொக்குகள் | 63,000 | |
| வியாபார வருமதிகள் | 78,000 | |
| ஐயுறவுக் கடன் ஏற்பாடு – 2016 ஏப்ரல் 01 இல் | | 2,300 |
| வங்கி மீதி | | 1,000 |
| செலுத்திய வருமான வரி | 2,900 | |
| விற்பனை | | 569,000 |
| விற்பனைக் கிரயம் | 363,000 | |
| விநியோகச் செலவுகள் | 60,000 | |
| நிருவாகச் செலவுகள் | 38,000 | |
| செலுத்திய தனிச்ச வட்டி | 2,800 | |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | 300 | |
| வியாபார சென்மதிகள் | | 61,300 |
| 2016 ஏப்ரல் 01 இல் வருமான வரி ஏற்பாடு | | 2,400 |
| | **916,000** | **916,000** |

கீழ்வரும் மேலதிகத் தகவல்கள் தரப்பட்டுள்ளன :

(1) 2017 மார்ச் 31 இல் தொக்குகள் பௌதிக ரீதியாக அறுதியீடு செய்யப்பட்டு கிரயத்தில் மதிப்பிடப்பட்டன. எனினும், பின்னர் 2017 ஏப்ரல் 30 இல் மேற்கொள்ளப்பட்ட மீளாய்வின்போது தரப்பட்டுள்ள தொக்கு உருப்படிகளில் ரூ. 3,000,000/- கொள்வனவு செய்யப்பட்ட சில வழக்கிழந்து ரூ. 2,700,000/- க்கு விற்கப்பட முடியுமென எதிர்பார்க்கப்பட்டது.

(2) கம்பனிக்கு ரூ. 2,000,000/- செலுத்தவேண்டியிருந்த ஒரு வாடிக்கையாளர் 2017 ஏப்ரல் 15 ஆந் திகதி வங்குரோத்து நிலை அடைந்ததன் காரணமாக அந்தத் தொகை அறவிடப்பட முடியாததாக உள்ளது. மேலும், ஐயுறவுக் கடன் ஏற்பாட்டினை ஆண்டின் இறுதியில் நிலுவையிலிருந்த வியாபார வருமதிகள் மீதியின் 5% இல் பேணுவதற்குத் தீர்மானிக்கப்பட்டது.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கிரயத்தில் நேர்கோட்டு அடிப்படையில் தேய்மானம் செய்யப்படும். அவற்றின் பயன்தரும் ஆயுட்காலம் கீழ்வருமாறு :

| | | |
|---|---|---|
| கட்டடங்கள் | : | 10 ஆண்டுகள் |
| மோட்டார் வாகனங்கள் | : | 5 ஆண்டுகள் |

(4) கம்பனி 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி ஒவ்வொன்றும் ரூ. 100/- ஆன 700,000 தனிச்சங்களை வழங்கியது. தனிச்சங்கள் மீது ஆண்டுக்கு 8% வட்டி அரையாண்டிற்கு ஒரு தடவை ஏப்ரல் 01 மற்றும் அக்டோபர் 01 ஆகிய திகதிகளில் செலுத்தப்படும். ஆண்டின்போது செலுத்தப்பட்ட வட்டியானது செலுத்திய தனிச்ச வட்டிக் கணக்கில் வரவுப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

(5) 2017 மார்ச் 31 இல் கீழ்வரும் அட்டுறுக்களும் முற்கொடுப்பனவுகளும் கணக்கிற் கொள்ளப்பட வேண்டும் :

| | ரூ. |
|---|---|
| அட்டுறுவான விளம்பரச் செலவு | 1,000,000 |
| முற்செலுத்தப்பட்ட தொலைபேசிச் செலவு | 500,000 |

(6) வரிமதிப்பாண்டு 2015/16 க்கான மொத்த வருமானவரிப் பரிப்பு ரூ. 2,900,000/- ஆக இணங்கப்பட்டு 2017 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டில் செலுத்தப்பட்டதுடன் செலுத்திய இத்தொகை செலுத்திய வருமான வரிக் கணக்கில் தாக்கல் செய்யப்பட்டது. வரிமதிப்பாண்டு 2016/17 க்கான மொத்த வருமான வரிப் பரிப்பு ரூ. 2,800,000/- ஆக மதிப்பிடப்பட்டது.

(7) நிதிக் கூற்றுக்கள் வழங்குவதற்காக பணிப்பாளர் சபையினால் 2017 மே 31 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்டது.

**நீங்கள் செய்யவேண்டியவை :**

**வரையறுக்கப்பட்ட சிலிக்கன் (தனி) கம்பனியின்** முகாமைப் பயன்பாட்டிற்காக கீழ்வருவனவற்றைத் **தயாரிக்குக** :

(a) 2017 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று (12 புள்ளிகள்)

(b) 2017 மார்ச் 31 ஆந் திகதி நிதிநிலைக் கூற்று (13 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

பகுதி *D* முடிவு

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |